# பல்சமய உரையாடல் திருப்பீட அவை

கிறித்தவர்களும் இந்துக்களும்

இளைய சமுதாயத்தை அமைதியை ஏற்படுத்துபவர்களாக உருவாக்குதல்

தீபாவளித் திருவிழாவிற்கான செய்தி

*2012*

வத்திக்கான் நகர்

# கிறித்தவர்களும் இந்துக்களும்:

# இளைய சமுதாயத்தை அமைதியை ஏற்படுத்துபவர்களாக உருவாக்குதல்

அன்புள்ள இந்து நண்பர்களுக்கு!

1. பல்சமய உரையாடலுக்கான திருப்பீடஅவை இவவாண்டிற்கான தீபாவளி வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. சகோதரத்துவமும், தோழமையும் உங்கள் குடும்பங்களிலும், குழுமங்களிலும் மேலும், மேலும் ஒளிர்வதாக.

2. அமைதியான உடனிருத்தலுக்கான பேரார்வத்திற்கு அச்சுறுத்தலாக உலகின் பல பகுதிகளில் எதிர்மறை சக்திகள் இருக்கின்ற மனித வரலாற்றின் இக்கால கட்டத்தில், சிந்தனையைப் பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சி தரும் பாரம்பரியமான வாய்ப்பை, இந்துக்கள், கிறித்தவர்கள் இன்னும் மற்றவர்கள் எல்லா மக்களையும் குறிப்பாக இளையோரை அமைதி ஏற்படுத்துபவர்களாக மாற்ற என்ன செய்ய வேண்டும் என ஆராய அழைக்கிறோம்.

3. அமைதி என்பது போர் இல்லாத நிலை அல்ல, அல்லது நீடிய அமைதி வாய்ந்த வாழ்வுக்கு உத்திரவாதமளிக்கின்ற உடன்பாடோ ஒப்பந்தமோ அல்ல. மாறாக முழுமையான வாழ்வை, குறைவு படாத வாழ்வை மீட்டெடுத்தல் (காண் 16ம் ஆசீர்வாதப்பர், மத்திய கிழக்கில் திருச்சபை, 9) மற்றும் அன்பின் கனி. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள், துறவறத்தார், சமூகத் தொடர்புத் துறையில் உள்ளோர், மற்றும் அமைதியை உருவாக்கும் உள்ளம் படைத்தோர் அனைவரும் இளைய சமுதாயத்திற்கு கற்பிக்கவும் இந்த முழுமையை உருவாக்கவும் அழைக்கப்படுகின்றனர்.

4. இளம் ஆண்களையும், பெண்களையும், அமைதியின் மக்களாகவும் அமைதியைக் கட்டி எழுப்புபவர்களாகவும் உருவாக்குவதில் பொது செயல்பாட்டோடு ஒருங்கிணைந்து ஈடுபடுத்திக்கொள்ள விடுக்கப்படுகின்ற அவசர அழைப்பாகும். அமைதி என்பது நம்பகத்தன்மையானதும் நீடித்து நிற்பதுமாக இருக்க வேண்டும் என்றால் அது உண்மை, நீதி, அன்பு மற்றும் சுகந்திரத்தின் மேல் கட்டப்பட வேண்டும் (காண் : 23ம் அருளப்பர், பாரில் அமைதி, 35) எல்லாவற்றிக்கும் மேலாக இளம் ஆண்களும், இளம் பெண்களும், அன்பிலும் சுதந்திரத்திலும், நேர்மையுடனும், நீதியுடனும் நடக்க வேண்டும். அமைதிக்கான கல்வியில், கலாச்சார வேறுபாடுகள் என்பது செழுமையே அன்றி அச்சுறுத்தல் அல்ல என்று தெரிவிக்க வேண்டும்.

5. குடும்பம்தான் அமைதியின் முக்கிய கல்விக்கூடம். அதில் பெற்றோர்கள்தான் அமைதியின் முக்கிய கல்வியாளர்கள். அவர்களின் வாழ்வாலும் போதனையாலும் குழந்தைகளை அமைதி வாழ்க்கைக்குத் தேவையான விழுமியங்களில் உருவாக்க முக்கிய பங்கு பெறுகின்றனர். அது ஒருவரை ஒருவர் நம்பி, மதித்து, புரிந்துகொண்டு, செவிகொடுத்து பகிர்ந்துகொண்டு, அக்கறைகொண்டு, மன்னித்து வாழ்வதில் அடங்கியிருக்கின்றது. இளையோர் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், பழகுதலிலும், படிப்பதிலும் மற்ற மதம், கலாச்சாரம் சார்ந்தோரோடு இணைந்து வேலை செய்வதிலும் வளர்ச்சி பெறுகின்றனர். அவர்களின் ஆசிரியர்களும், அவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் பொறுப்பானவர்களும், மனித மாண்பை மதித்துக் கொண்டாடக் கூடிய, ஒட்டு மொத்த மனித வளர்ச்சிக்கான, நட்பு, நீதி, அமைதி, கூட்டுறவு போன்றவற்றை வலியுறுத்துகின்ற, கல்வியை அளிக்க உறுதி செய்ய வேண்டும். ஆன்மீக மற்றும் அறநெறி விழுமியங்கள் கல்வியின் அடித்தளமாக அமைத்து, பிளவுகளையும், புறக்கணிப்பையும் உண்டாக்குகின்ற கொள்கைகளுக்கு எதிராக மாணவர்களை எச்சரிப்பது என்பது, அவர்களின் தவிர்க்க முடியாத ஒழுக்க நெறியாக அமைய வேண்டும்.

இளையோரின் கல்வியை உறுதிப்படுத்துவதில் சமுதாய, அரசியல், கலாச்சாரத் தளத்தில் இருக்கும் நாட்டு மற்றும் தனிப்பட்டத் தலைவர்களுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. குறிப்பாக சமயத்தலைவர்கள், ஆன்மீக, அறநெறி தலைவர்களாக அழைக்கப்பட்டதன் காரணமாக, இளைஞர்கள் அமைதி வழி நடக்கவும், அவர்களை அமைதியின் தூதுவர்களாக மாற்றவும் தொடர்ந்து உற்சாகமூட்ட வேண்டும். எல்லாவிதமான தொடர்புகளும் மக்களின் சிந்தனை, உணர்வு, செயல்பாடுகளுக்கு உரு கொடுப்பதால், இத்துறைகளில் ஈடுபடுபவர்கள் சிந்தனைகள், வார்த்தைகள், அமைதியின் செயல்பாடுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதில் இயன்றவரை ஈடுபட வேண்டும். மற்றவர்களுக்கு முன்வைக்கின்ற இலட்சியங்களை இளைஞர்களே வாழ்ந்து காட்டி, தங்களின் சுதந்திரத்தை பொறுப்போடு பயன்படுத்தி, அமைதி கலாச்சாரத்தை உருவாக்க உள்ளன்புள்ள உறவுகளை மேம்படுத்த வேண்டும்.

6. முழுமையைக் கொணரும் அமைதி சகோதரத்துவ உலகை உருவாக்கும், மேலும் ‘புதுவிதமான சகோதரத்துவத்தை’ மக்கள் மத்தியில் ‘ஒவ்வொரு மனிதனிலும் உள்ள சமத்துவத்தை பகிர்ந்து கொள்வதை’ நிலைக்கச் செய்ய உருவாக்கும்.(காண்: 16ம் ஆசீர்வாதப்பர் லெபனன் தூதுரைப் பயணம், அரசு உறுப்பினர்கள், குடியரசு நிறுவனங்கள், தூதரக பணிக்குழுக்கள், சமயத்தலைவர்கள் மற்றும் கலாச்சார உலகு பிரதிநிதிகள், உடனான கூட்டம், 15, செப்டம்பர், 2012)

7. நாம் எல்லோரும், எப்போதும், எல்லா இடங்களிலும், சமய, அறநெறிகளில் உறுதியாக நிலைத்து, அமைதியை உருவாக்குபவர்களாக மாற முயற்சிக்கின்ற இளையோருக்கு உற்சாக மூட்டுவோமாக.

உங்கள் அனைவருக்கும் ஆசீர் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Jean Louis Card. Tauran

கர்தினால் ஜீன் லூயி தௌரான்

தலைவர்.

மிகுயில் ஏஞ்சல் ஆயுசோ குல்சாட் MCCJ

செயலர்.

PONTIFICAL COUNCIL FOR INTERRELIGIOUS DIALOGUE

00120 Vatican City

Tel: +39.06.6988 4321 / 06.6988 3648

Fax: +39.06.6988 4494

http://www.vatican.va/roman_curia/pontifical_councils/interelg/index.htm

E-mail: dialogo@interrel.va